புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.,

ந.க.ப2/9528/2019(வளர்ச்சி) நாள்:08.12.2020

பொருள்: பணியமைப்பு- கருணையடிப்படை பணிநியமனம்- புதுக்கோட்டை மாவட்டம்- புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்- ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்- எஸ்.முத்துக்குமார் (லேட்) என்பவரது வாரிசுதாரர் மனைவி திருமதி பி.சுபா என்பவருக்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக - தற்காலிகமாக பணிநியமனம் செய்து - உத்தரவிடல்.

பார்வை:
1.திருமதி பி.சுபா, க/பெ.எஸ்.முத்துக்குமார் (லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்: 26.09.2019.
2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), புதுக்கோட்டை கடிதம் ந.க.தி2/2049/2019 நாள்: 29.11.2019.
3.அரசாணை எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு-1)துறை நாள்:23.01.2020.
4.சென்னை ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் இயக்குநர் கடித எண் ந.க. 15084/2020/எப்1 நாள்: 26.09.2020.
5.தொடர்புடைய ஆவணங்கள்.

-0-

-------

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியப் பணி மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து 30.07.2019 அன்று பணியிடை காலமான எஸ்.முத்துக்குமார் என்பவரது வாரிசுதாரர் திருமதி பி.சுபா என்பவருக்கு பார்வை 4இல் கண்டுள்ளவாறு 2020-2021ஆம் ஆண்டிற்கான 25% இட ஒதுக்கீட்டின் கீழ் கருணை அடிப்படையில் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கீழ்க்கண்டவாறு புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் தற்காலிகமாக பணி நியமனம் செய்து இதன் வழி உத்திரவிடப்படுகிறது.

| வ. எண் | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி | பணிநியமனம் செய்யப்படும் பதவி மற்றும் அலுவலகம் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | திருமதி பி.சுபா<br>க/பெ.எஸ்.முத்துக்குமார்(லேட்)<br>1375, கம்பன் நகர்,<br>ராஜகோபாலபுரம்<br>புதுக்கோட்டை. | இளநிலை உதவியாளர்,<br>(சத்துணவுத் திட்டம்)<br>ஊராட்சி ஒன்றியம்<br>புதுக்கோட்டை.<br>(காலி பணியிடத்தில்) |

<u>நிபந்தனைகள்</u> :-

அ) இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

ஆ) இந்நியமனம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெற்ற பிறகே பணி வரன்முறை செய்யப்படும்.

இ) அரசாணை எண்.33 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்.02.03.2017-ல் தெரிவித்துள்ளப்படி, இவரது தகுதிகாண் பருவக் காலத்திற்குள் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வுகள் மற்றும் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்(ஐந்து ஆண்டுகளுக்குள்)

ஈ) துறைத் தேர்வுகள் அனைத்தும் மேற்காணும் காலக்கெடுவுக்குள் தேர்ச்சி பெறவில்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண்.31(4)-ன்படி பணி நீக்கம் செய்யப்படும்.

உ) இவர் பணியில் சேரும்போது அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் தகுதிச் சான்றுடன் பணியில் சேர வேண்டும்.

ஊ) இவர் அரசுப்பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் Pay matrix Level.8 வ.எண்.1ன் ரூபாய்.19500/- ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு இதர படிகளுடன் ஊதியம் பெற தகுதியுடையவர் ஆவார்.

எ) இவரது பணி பங்களிப்பு ஓய்வூதியத்தின்கீழ் கொண்டுவரப்படுவார். (Contributorary Pension Scheme)

ஏ) விண்ணப்பதாரரால் கொடுக்கப்பட்ட சான்றுகளும், விபரங்களும் பொய்யானவை என பின்னர் தெரியவந்தால் உடனடியாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யப்படுவதோடு வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் இதர படிகளும் திரும்ப பிடித்தம் செய்யப்பட்டு, குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நபர் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலகத்தில் பணியில் சேர கேட்டுக்கொள்ளப்படுகிறார். இவர் பணியில் சேர்ந்த விபரத்தை உடன் தெரிவிக்குமாறு தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர் கேட்டுகொள்ளப்படுகிறார்.

8/12/20

மாவட்ட ஆட்சியருக்காக.
புதுக்கோட்டை

8/12/20

பெறுநர்:

திருமதி பி.சுபா
க/பெ.எஸ்.முத்துக்குமார்(லேட்)
1375, கம்பன் நகர்,
ராஜகோபாலபுரம்,
புதுக்கோட்டை.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)/(கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை

நகல்: இயக்குநர், ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், பனகல் கட்டிடம்,
சைதாப்பேட்டை, சென்னை-15.